JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - PW- 6   Witness
for Prosecution

| CC. No. | 43/2025 | Crime No. | | Station | |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw6- மருத்துவர். கவிதா** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 18th day of August 2025 | | | |

**எதிரிகள் ஆஜர்**

**முதல்விசாரணை**

நான் தற்போது அந்தியூர் அரசு மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27/05/2023–ம் தேதியன்று இரவுசுமார் 11.00 மணியளவில் நான் மேற்படி மருத்துவமனையில் மருத்துவ அலுவலில் இருந்தபோது அந்தியூர் கீழ்வானியைச் சேர்ந்த கருப்பண்ணன் (எ) ராஜு என்பவரின் மனைவி அன்னக்கொடி என்பவர் தன்னை தன் தனது வீட்டில் வைத்து அவருக்கு தெரிந்த ஒரு ஆண் நபர் அன்றைய தினம் இரவு சுமார் 10.00 மணியளவில் தாக்கி விட்டதாக கூறி சிகிச்சைக்காக வந்தவரை பரிசோதித்தபோது அவருக்கு இரத்த அழுத்தம் மற்றும் இதயத் துடிப்பு சீராக இருந்தது. மேலும் அவருக்கு கீழ்காணும் காயங்கள் காணப்பட்டது

1. இடது கன்னத்தில் தன்னை ஓங்கி அறைந்ததாக கூறினார். இடது கன்னத்தில் வலி மற்றும் வீக்கம் காணப்பட்டது.
2. இடது காதில் வலி இருப்பதாக கூறினார்.
3. இடதுபுற கழுத்துப் பகுதியில் வலி இருப்பதாக கூறினார்.

அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார் 28/05/2023 ஆம் தேதியன்று இடது பக்க கன்னத்தில் வீக்கம் அதிகமாக இருந்ததால் எலும்பு முறிவு ஏற்பட்டு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அவரை மேல் சிகிச்சைக்காக பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டது. பின்னர் பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருந்து பெறப்பட்ட மருத்துவ கருத்துரையின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். விபத்து பதிவேற்றுடன் கூடிய காயச் சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு தொடர்பாக புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரணை செய்தார்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.08.18 06:43:30 +0530

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. எதிரிகளுக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் எதிரி தரப்பில் எவ்வித குறுக்கு விசாரணையும் செய்யாததால் மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.08.18 06:43:39 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.